12.11.2024
இடைநிலை மனு எண்.1/2023
In
அசல் வழக்கு எண்: 383/2009

எ.ம.சா.1 சாட்சி ராவுத்தன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எந்த மனுவிற்கு சாட்சி சொல்கிறேன் என்றால் சிமெண்டு எதற்காக பூசப்பட்டுள்ளது என்று மனு தாக்கல் செய்துள்ளார். அதற்காக சாட்சியம் அளிக்கிறேன். நான் வீடு கட்டகூடாது என்று மனு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. வீடு கட்டிய பிறகு பூசக்கூடாது என்று மனு தாக்கல் செய்துள்ளார். நான் வீடு கட்டி பூசி முடித்துவிட்டேன் என்றால் சரிதான். ஆணையர் பார்வையிட்ட போது வீடு கட்டி முடிக்கவில்லை என்றால் சரியல்ல. கட்டி முடித்துவிட்டோம். பூசாமல் மட்டும் இருந்தது. ஆணையர் அறிக்கையில் வீடு கட்டி முடிக்கவில்லை என்று சொல்லியுள்ளார் என்றாலும் அது சரியா தவறா என்றாலும் தவறாகும்.

என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 புகைப்படும் கட்டி முடிக்காமல் இருந்த வீட்டின் புகைப்படம் என்றாலும் ம.சா.ஆ.2 கட்டி முடித்து பூசப்பட்ட நிலையில் உள்ள புகைப்படம் என்றாலும் சரிதான். மனுதாரர் மீது நான் தாக்கல் செய்துள்ள மனுவில் கட்டிடம் கட்டகூடாது என்று உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.499/2009 என்ற வழக்கில்தான் மேற்படி உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றாலும் மேற்படி வழக்கு நான் தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். மேற்படி உத்தரவை மீறி கட்டிடம் கட்டியுள்ளதாக நீதிமன்ற அவமதிப்பு மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் மீறவில்லை.

எனது பத்திரப்படி எனக்கு தென்வடல் 6 கஜம் என்றாலும், மனுதாரருக்கு தென்வடல் 58 அடி என்றாலும் சரிதான். ஸ்கெட்சுப்படி வீதி உள்ளது. நான் மனுதாரரின் 58 அடியை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளேனா இல்லையா என்றால் இல்லை. தற்போது ஆணையரை நியமனம் செய்து இடத்தை பார்வையிட்டு நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேனா இல்லையா என்பது தெரியவரும் என்றால் ஏற்கனவே 3 முறை அளக்கப்பட்டுவிட்டது. அதனால் பார்க்ககூடாது. வீட்டை கட்டி முடித்தபிறகு ஆணையர் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. கட்டி முடித்த பிறகு பார்த்தார்கள். பூசிய பிறகுதான் பாரக்கவில்லை. மாடிப்படி மற்றும் கிரில் ஆகியவைகளை ஆணையர் பார்க்கவில்லை என்றால் மாடிப்படியை பார்த்தார். அப்போது கிரில் வைக்கவில்லை. நான் நீதிமன்ற உத்தரவை மீறி கட்டிடம் கட்டியுள்ளேன் என்றாலும் நீதிமன்ற ஆணையர் வந்து பார்த்தால் உண்மை தெரியவரும் என்றாலும் சரியல்ல. மீண்டும் ஆணையர் வந்து பார்த்தால் நீதிமன்ற உத்தரவை மீறி கட்டியுள்ளது தெரிந்துவிடும் என்பதால் ஆணையரை நியமனம் செய்யக்கூடாது என்று எதிர் வியாஜியம் செய்கிறேன் என்றால் சரியல்ல.

எனது வீட்டில் தென்வடல் 6 கஜத்திற்கு அடுத்து வடக்கே யாருடைய வீடு உள்ளது என்றால் எனது வீடு உள்ளது. 6 கஜத்திற்கும் வடக்கே உள்ள எனது வீட்டிற்கும் இடையில் சந்தோ தெருவோ உள்ளதா என்றால் இல்லை. எனது வீட்டிற்கு வடக்கே வெள்ளையம்மாள் வீடு உள்ளதா என்றால் எனது வீட்டிற்கும் சந்திற்கும் வடக்கேதான் வெள்ளையம்மாள் வீடு உள்ளது. வடக்கே உள்ள எனது வீட்டிற்கு வடக்கே தெரு உள்ளது என்றால் சரிதான். அந்த தெருவிற்கு வடக்கே உள்ள வீடு யாருடைய வீடு என்றால்

வெள்ளையம்மாள் வீடு ஆகும். வெள்ளையம்மாள் வீட்டை ஒட்டி எனக்கு வீடு உள்ளதா என்றால் இல்லை. 1965ம் வருத்திய கிரைய பத்திரத்தில் கண்ட வடக்குமால் சரியா தவறா என்றால் எனது வீட்டிற்கு பத்திரம் கிடையாது. எனது வீடு பூர்வீக வீடு ஆகும். 6 கஜத்திற்கான பத்திரத்தில் கண்ட வடக்குமால் சரியா தவறா என்றால் சரியானமால் ஆகும். அந்த பத்திரத்தில் வடக்குமால் தவறானது என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவை மீறியுள்ளேன் என்றாலும் ஆணையரை வைத்து பார்த்தால்தான் உண்மை தெரியவரும் என்றாலும் அதனால் இந்த மனு அனுமதிக்கதக்கது என்றால் சரியல்ல. உண்மையை மறைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆணையர் தாவா இடத்தை பார்த்தால் யாரும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை என்றாலும் அதனால் ஆணையரை நியமதித்து பார்வையிட வேண்டும் என்றால் சரியல்ல. மனுதாரர் தரப்பு நியாயத்தை நிரூபணம் செய்வதற்காக மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.